**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 157/2018**

Prosecution witness : 2

| | |
|---|---|
| Name: அழகுமுத்து | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Accused present

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 01.09.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது தல்லாகுளம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 09.12.2016ம் தேதி அவனியாபுரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது சரக ரோந்தாக தலைமைகாவலர் -1717-திரு.கண்ணன், 332-திரு.ரமேஷ் ஆகியோர்களுடன் 20.30 மணியளவில் மதுரை, வில்லாபுரம், வெற்றி தியேட்டர் பின்புறம் உள்ள கால்வாயின் அருகில் சென்றபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சென்றபோது இருசக்கரவாகனத்தில் வந்த நபர் போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் தப்பி செல்ல எத்தனித்தார். அவரை பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் ராமகிருஷ்ணன், த/பெ.கருப்பையா, மாயழகு காம்பவுண்ட், கிழக்கு தெரு, வில்லாபுரம் என்பதும், அவர் ஓட்டி வந்த இருசக்கரவாகனம் TN 59 R 5546 புளூகலர் சுசுகி ஆகும். அந்த இடத்தில் உள்ள மின்விளக்கு வெளிச்சத்திலும், டார்ச் வெளிச்சதிலும் அவரிடம் உன்னிடம் அரசால் தடைசெய்யப்பட்ட, மனித உயிருக்கு கேடுவிளைவிக்கும் போதைப்பொருள் வைத்திருப்பதாக எனக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளது. உங்களை அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமோ அழைத்து செல்லவா அல்லது நானே சோதனையிடவா என்று கேட்டதற்கு அவர் நீங்களே சோதனையிடலாம் என 20.45 மணிக்கு சோதனை

சம்மத கடிதம் கொடுத்தார். அதன் பின்னர் அவர் வைத்திருந்த ஆரஞ்சு கலர் கட்டைப்பையை சோதனை செய்தபோது அதில் 1கிலோ 250கிராம் கஞ்சா என்ற போதைப்பொருள் இருந்தது. அதிலிருந்து 100கிராம் கஞ்சாவை மாதிரிக்காக தனியாக பிரித்து எடுத்து நியூஸ்பேப்பரில் மடித்து அரக்கினால் போலீஸ்பட்டன் சீல்வைத்தேன். மீதம் இருந்த 1150கிராம் கஞ்சாவை அதே கட்டைப்பையுடன் மற்றொரு நியூஸ்பேப்பரில் மடித்து அரக்கினால் போலீஸ்பட்டன் சீல் வைக்கப்பட்டது. அந்த இடத்தில் வெளி நபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னுடன் வந்த போலீஸ்பார்ட்டிகள் முன்னிலையில் மேற்படி கஞ்சாவையும் அவர் வைத்திருந்த இருசக்கரவாகனத்தையும் 21.15 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அவரிடம் மேற்படி கஞ்சா பற்றி விசாரித்தபோது அவர் வருஷநாடு பகுதியில் இனம் தெரியாத நபரிடம் கஞ்சாவை விற்பனைக்கு வாங்கி வந்ததாக கூறினார். மேற்படி குற்றத்திற்காக ராமகிருஷ்ணனை 21.45 மணிக்கு கைது செய்தேன். பின்னர் கைதுசெய்யப்பட்ட நபர் மற்றும் அத்தாட்சியில் கைப்பற்றிய சொத்துக்களுடன் 23.00 மணிக்கு நிலையம் வந்து அவனியாபுரம் காவல்நிலைய குற்ற எண். 2398/2016 , ச/பி.8(C) r/w 20(b)(ii)(B)NDPS ACTன் படி வழக்கு பதிவு செய்து வழக்கின் கோப்புக்களை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ. 2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.